செ.வெ. எண்: 124 நாள் : 08.02.2011

## பத்திரிக்கைச் செய்தி

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பிப்ரவரி 2011 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் 12.02.2011 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல் படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்களின் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எ | மண்டலங்களின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்களின் முகவரி |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் மண்டலம் | மியாசிஸ் மெடரிக்குலேஷன் ஸ்கூல்<br>எண் 53, அங்கப்பன் நாயக்கன் தெரு, சென்னை 1 |
| 2 | இராயபுரம் மண்டலம் | சென்னை உருது பெண்கள் தொடக்கப்பள்ளி<br>எண் 71 அர்த்தூன் ரோடு, இராயபுரம், செ 13 |
| 3 | பெரம்பூர் மண்டலம் | பனந்தோப்பு இரயில்வே காலனி ( உதவி பெறும் தொடக்கப்பள்ளி)<br>எண் 292/293 , பனந்தோப்பு இரயில்வே காலனி , அயனாவரம், சென்னை 23 |
| 4 | அண்ணா நகர் மண்டலம் | மாமன்றம் உறுப்பினர் அலுவலகம், வட்டம் 58<br>ஆஸ்பிரியன் கார்டன் சாலை, கீழ்பாக்கம், செ 10 |
| 5 | அம்பத்தூர் மண்டலம் | P.K.M சமூககூடம், படிவட்டம்மன் கோயில் தெரு,<br>மேல் அயனம்பாக்கம், ( FA 002 நியாய விலை அங்காடி அருகில்) சென்னை 96 |
| 6 | வில்லிவாக்கம் மண்டலம் | அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி<br>எண்.1, 4வது மெயின் ரோடு, சிட்கோ நகர், வில்லிவாக்கம், செ– 49 |

| | | |
|---|---|---|
| 7 | திருவொற்றியூர் மண்டலம் | குருமூர்த்தி உயர்நிலைப்பள்ளி.<br>எண் 24, ஆர்.வி.நகர், 6வது தெரு<br>(கட்டபொம்மன் தெரு அருகில் ) திருவொற்றியூர், செ 118 |
| 8 | ஆவடி மண்டலம் | நகராட்சி உயர்நிலைப்பள்ளி<br>எட்டியம்மாள் நகர், (ஈஸ்வரன் கோயில் பின்புறம்)<br>திருமுல்லைவாயில், சென்னை 62. |
| 9 | தி.நகர் மண்டலம் | மாநகராட்சி துவக்கப்பள்ளி, 18, ஈஸ்வரன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33 ( சிவன் கோயில் அருகில்) |
| 10 | மயிலாப்பூர் மண்டலம் | அவ்வை இல்லம் மற்றும் அனாதை இல்லம், 24/41, பெசண்ட் அவின்யூ ரோடு, அடையாறு, சென்னை 20 (மலர் மருத்துவமனை அருகில்) |
| 11 | பரங்கிமலை மண்டலம் | ஜெயகோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப்பள்ளி, நங்கநல்லூர் 5வது பிரதான சாலை, நங்கநல்லூர், செ 61. |
| 12 | தாம்பரம் மண்டலம் | சமுதாய நலக்கூடம், கோவிலஞ்சேரி, மதுரப்பாக்கம் ஊராட்சி, மாம்பாக்கம் மெயின்ரோடு, சென்னை 126 (அகரம் தென் மாடம்பாக்கம் பஞ்சாயத்து அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை மண்டலம் | சென்னை மேல்நிலைப்பள்ளி, ஏரிக்கரை தெரு, நெசப்பாக்கம், சென்னை 78 (ராமாபுரம் ரோட்டில் MGR சிலை அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு மண்டலம் | பாலவிஹார் நர்சரி பள்ளி, கணபதி தெரு, கோபாலபுரம், சென்னை 86. |
| 15 | சேப்பாக்கம் மண்டலம் | செயின்ட் அப்பாஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, 109, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை–4 (Opp. to New Woodlands) |
| 16 | சோழங்கநல்லூர் மண்டலம் | பஞ்சாயத்து அலுவலகம், நீலாங்கரை, ECR ரோடு<br>(கபாலீஸ்வரர் நகர் அருகில்) |

(ஒம்) கா. பாலச்சந்திரன்
ஆணையாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**